DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, RAMANATHAPURAM

**CC.No.289/2022**

Solemnly affirmed in accordance with the provision of Act X 1873 on the 21st day of March 2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the for | : | **PW – 1** | கிராமம் | : | களத்தாவூர் |
| பெயர் | : | சக்திவேல் | தாலுகா | : | இராமநாதபுரம் |
| த/ பெ. | : | ராமன் | சமயம் | : | இந்து |
| வயது | : | 45 | ஜாதி | : | தேவேந்திர குல வேலாளர் |
| தொழில் | : | விவசாயம் | | | |

<u>நாள்: 21.03.2024</u>
<u>நேரம்: 02.30 பி.பி</u>

1,2,4 எதிரிகள் ஆஜர். 3ம் எதிரி ஆஜர் இல்லை. அவரது தரப்பில் அவரது வழக்கறிஞரால் 317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

சாட்சியிடம் சத்தியபிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும். அவர்கள் நரியனேந்தல் கிராமத்தை சேர்ந்தவர்கள். நான் நரியனேந்தல் கிராமத்தில் பாண்டி என்பவரின் மகளை திருமணம் செய்துள்ளேன். தீபாவளிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக நான் நரியனேந்தல் கிராமத்திற்கு குடும்பத்துடன் சென்றேன். 24.10.2022 ம் தேதி சுமார் மாலை 04.00 மணியளவில் நான் மாடுகளுக்கு பால் கரந்து விட்டு கொல்லையில் இருந்து வீட்டிற்கு வந்தேன். 2ம் எதிரி சுப்பிரமணியன் என்பவர் என்னை அசிங்கமாக தகாத வார்த்தைகளால் பேசினார். 1ம் எதிரி மதிவாணன் என்னை பார்த்து ஊர் வீட்டு ஊர் வந்து என்னை தகாத வார்த்தைகளால் பேசி மல்லுகட்டினார். அப்போது 3ம் எதிரி கவியரசன் தென்னைமட்டை வைத்து ஓடி வந்து எனது வலமது பக்க மோதிர விரலில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். 4ம் எதிரி பாண்டியம்மாள் விலக்கமாத்தை எடுத்து கொண்டு வாங்கி குடித்த

பயலே என்று ஊர் விட்டு ஊர் வந்து என்று சொல்லி எனது முதுகில் அடித்தார். எனது மனைவியை 1ம் எதிரி கம்பு வைத்து வலது பக்க காலில் அடித்தார். அதன் பிறகு சம்பவத்தை பார்த்த பெரியசாமி என்பவர் சண்டை பார்த்து விலக்கிவிட்டார். அதன் பிறகு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார்தான் அது. அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். அதன் பிறகு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு 5 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அதன் பிறகு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

தற்போது முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைதான் போலிசார் என்னை விசாரித்த போது சொன்னேன் என்றால் சரிதான். களத்தாவூருக்கும் நரியனேந்தலுக்கும் சுமார் எத்தனை கிலோமீட்டர் தூரம் என்றால் சுமார் 15 கி.மி. எனது வீடு களத்தாவூரில் உள்ளது என்றால் சரிதான். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். ஆடு, மாடுகள் உள்ளது. எனது மனைவியின் சகோதரி கணவரும் 1ம் எதிரியும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது மனைவியின் தங்கை வீட்டுக்காரரின் பெயர் மணிமாறன். மணிமாறனுக்கும் அவரது சகோதரரான 1ம் எதிரிக்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த சொத்து பிரச்சனை சம்பந்தமாக எனது மாமனார் பாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அந்த புகாரின் மீது விசாரணை நடைபெற்ற விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தன்று எனது மாமனாரின் மாட்டு கொட்டகைக்கு சென்று பால் கறந்ததாக சொன்ன நிலையில் எத்தனை மாட்டிற்கு நான் பால் கறந்தேன் என்றால் இரண்டு மாட்டிற்கு கறந்தேன். பொதுவாக ஒரு மாட்டிற்கு பால் கறப்பதற்கு எத்தனை மணி நேரம் ஆகும் என்றால் சுமார் அரை மணி நேரம் முதல் முக்கால் மணி நேரம் ஆகும். சம்பவத்தன்று எத்தனை மணி நேரம் பால் கறந்தேன் என்றால் ஒரு மணி நேரம் கறந்தேன். எனது மாமனார் வீட்டிற்கு எப்போது செல்வேன் என்றால் அடிக்கடி செல்வேன். தீபாவளிக்கு ஒருவர் மாமனார் வீட்டிக்கு செல்வதாக இருந்தால் தல தீபாவளிக்குதான் செல்வார்கள் என்றால் தீபாவளிக்கு எனது மாமனார் விருந்திற்கு அழைத்ததால் நான் சென்றேன். சம்பவத்தின்று யார் யார் தேவிப்பட்டிணம் காவல் சென்றோம் என்றால் நான், எனது தம்பி கண்ணதாசன் மற்றும் எனது மாமனார் சென்றோம். மருத்துவமனைக்கு யாரை அழைத்து சென்றேன் அங்கு என்னுடன் யார் யார் இருந்தார்கள் என்றால் எனது தம்பியை அழைத்து சென்றேன் அவர்தான் என்னுடன் இருந்தார். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். சம்பவத்தன்று காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார் என்றால் நான்தான் கொடுத்தேன். புகாரை நான் கைப்பட்ட எழுதி கொடுத்தேனா அல்லது வேறு ஒருவரை வைத்து எழுதி கொடுத்தேனா என்றால் வேறு நபரை வைத்து எழுதி நான் கையெழுத்து போட்டேன். புகார் எழுதிய நபர் யார் என்றால் எனக்கு தெரியாது. புகாரை யார் எழுதினார் என்று

கவனிக்கவில்லை. அந்த புகாரில் யார் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் எனது மாமனார் பாண்டி போட்டார். சம்பவ இடத்திற்கும் எனது மாமனார் பாண்டி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 மீட்டர் இருக்கும். எதிரி மதிவாணன் வீடு சம்பவ இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 150 மீட்டர். எனது மாமனார் வீட்டை தாண்டிதான் சம்பவ இடத்திற்கு வரவேண்டும். சம்பவம் நடந்த இடம் ஊரின் மைய பகுதி என்றால் சரிதான். சம்பவத்தை சுற்றி வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மாலை நேரத்தில் சம்பவ இடத்தில் பலர் இருப்பார்கள் என்றால் சரிதான். எனது தம்பியின் சொந்த ஊர் மேலசித்தை. எனது தம்பியின் வீடு மேலசித்தை கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். மேலசித்தை கிராமத்தில் இருந்து நரியனேந்தல் கிராமத்திற்கு வரவேண்டும் என்றால் சுமார் 45 நிமிடம் முதல் 1 மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். எனது தம்பி வந்தபிறகுதான் நான் காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் இரவு சுமார் 09.45 மணிக்கு சென்றிருப்பேன். நான் கொடுத்த புகாரில் எதிரிகள் எந்த கம்பை வைத்து அடித்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். தென்னைமட்டையை வைத்து அடித்ததாக சொல்லியுள்ளேன். மருத்துவமனையில் எனது மனைவி சிகிச்சை பெற்றார்களா என்றால் இரண்டு நாள் சிகிச்சை பெற்றார்கள். எனது மனைவி யார் உடன் மருத்துவமனைக்கு வந்தார் என்றால் அவராகவே பேருந்தில் வந்தார். எனது மனைவி எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எனது மாமனார் பாண்டி தூண்டுதலின் பேரில் அவர்களுக்கு இருந்த சொத்து பிரச்சனை சம்பந்தமாக அவர்களை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் என்னை வைத்து பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எதிரிகள் யாரும் என்னை தாக்கவில்லை என்றாலும் அசிங்கமாக பேசவில்லை என்றாலும் நான் திட்டமிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

E VIRGIN VESTA

Digitally signed by E VIRGIN VESTA
Date: 2024.03.21 18:17:45 +0530